முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி பி.கவிதா, பி.ஏ.,எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

ம.சா. 2 நாள்.30.08.2023

| | | | |
|---|---|---|---|
| MCOP. No. | 319/2019 | | |
| பெயர் | Hemalatha | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் சீர்காழி தாலுக்கா, திருவெண்காட்டில் உள்ள ஸ்ரீ மெய்கண்டார் உதவி பெறும் தொடக்க பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து எங்கள் பள்ளியில் ஆசிரியராக பணபுரிந்த திரு கார்த்திக் என்பவர் சாலை விபத்தில் இறந்துவிட்டதால் அவர் இறந்த காலத்தில் பணிபுரிந்த வேலை மற்றும் சம்பளத்தை பற்றி ஆவணஙகள் தாக்கல் செய்து சாட்சியம்அளிக்க அழைப்பானை எனக்கு வந்ததன் பேரில் நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன், மேற்படி அழைப்பானையில் திரு கார்த்திக் என்பவரின் பணி பதிவேடு மற்றும் அவரது சம்பள சான்றினை தாக்கல் செய்ய கோரப்பட்டுள்ளது. அதன் படி நான் அவரது பணிபதிவேடு மற்றும் சம்பள பதிவேட்டினை தாக்கல் செய்கிறேன். திரு கார்த்திக் அவர்கள் நிரந்தர பணியாளராக இரண்டாம் நிலை ஆசிரியராக 01.12.2009 முதல் பணியாற்றி வந்தார். அவர் 13.10.2017 ல் இறந்துவிட்டார். அவரது பணி பதிவேட்டில் அவரது பிறந்த தேதி 29.02.1988 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 13.10.2017 ல் அவரது மாத சம்பளம் ரூ.3156/- பிடித்தம் போக ரூ.26,166/- கையில் பெற்றார். அவரது மொத்த சம்பளம் ரூ.29,322/- ஆகும். அவர் இறந்த தேதியில் இருந்து அவரது ஓய்வு பெறும் வருடம் 2048 என்று பதிபதிவேட்டில் உள்ளது. தற்போது 60 வயது ஓய்வு பெறும் வயது என்று உள்ளதால் அவர் 2050 வரையில் பணியில் இருந்திருப்பார். எங்கள் பள்ளியில் அரசிடம் இருந்து உதவி பெறும் பள்ளி என்பதால் இறந்த கார்த்திக் அவரது முழுகாலம் வரையில் பணியில் இருந்திருந்தால் தலைமை ஆசிரியராக பணி உயர்வு பெற்றிருக்கலாம். அவருக்கு முன்பாக எங்கள் பள்ளியில் 7 நபர்கள் உள்ளதால் அவர்களின் தலைமை ஆசிரியர் பணி காலத்திற்கு பின்னரே கார்த்திக் அவர்களுக்கு

தலைமை ஆசிரியாக பணி உயர்வு பெற வாய்ப்பு இருக்கும். தற்போது இரண்டாம் நிலை ஆசிரியராக இருக்கும் அவருக்கு ஒருவருடத்திற்கு ஒரு முறை வருடாந்திர ஊதிய உயர்வு கிடைக்கும். அவரது பணி பதிவேட்டில் இருந்து அவருக்கு 01.10.2016ல் அவர் பெற்ற ஊதியத்தில் 3 சதவீதமான ரூ.360/- வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அவர் பணி உயர்வு பெற்றிருந்தால் அப்போது ஊதிய உயர்பு கிடைக்கும் மேலும், பே - கமிஷன் உயர்வுகள் வரும்போது அவர் பயன் பெற்றிருப்பார். அவரது பணி பதிவேட்டின் நகல்கள் சா சா ஆ 1 ஆகும், அவரது சம்பள சான்று சா சா ஆ 2 ஆகும்.
<u>குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>